Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 323

சனிக்கிழமை
15 ஒக்ரோபர் 2022


புரட்டாதி 28 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50



"மாவின்ர விலை, கறண்ட் கட் பண்ற நேரம் எல்லாம் குறையுது எண்ட இன்பத் தேன் வந்து காதில பாயுது பாருங்கோ"

## நவாலி – அட்டகிரியில் கைக்குண்டுகள் மீட்பு



யாழ்ப்பாணம், ஒக். 15
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவாலி அட்டகிரிப் பகுதியில் 111 கைக்குண்டுகள் நேற்று வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டன என்று யாழ். பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.
அட்டகிரிப் பகுதியிலுள்ள காணியொன்றை காணி உரிமையாளர் கடந்த 11ஆம் திகதி உழவுக் 11 ➤

யாழ். பண்ணையில்

## புலிகளின் ஆயுதங்களை தேடியோருக்கு ஏமாற்றம்



யாழ்ப்பாணம், ஒக். 15
யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள சுகாதாரப் பணிமனை அலுவலகத்தின் காணியினுள் புலிகளின் ஆயுதங்கள் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அங்கு தேடுதல் பணிகள் 11 ➤

## மின்தடை குறைகிறது

கொழும்பு, ஒக். 15
வார இறுதி நாள்களில் மின் தடைப்படும் நேரம் குறைக்கப்படும் என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன 11 ➤

## ஞானசாரதேரருக்கு மன்று பிடியாணை!

கொழும்பு, ஒக். 15
பொதுபலசேனாவின் பொதுச்செயலர் கலகொட அத்தே ஞானசாரதேரருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பித்து உத்தரவிடப்பட்டுள்ளது. 11 ➤

# தப்பமுடியாத அவலத்துக்குள் மக்கள் செல்லும் அபாயம்!

## இலங்கையர்கள் குறித்து செஞ்சிலுவைச் சங்கம் எச்சரிக்கை

**கொழும்பு, ஒக்ரோபர் 15**

**இலங்கை மக்கள் தப்பமுடியாத அவலத்துக்குச் சென்றுகொண்டிருக்கின்றார்கள். மக்களின் மனிதாபிமானத் தேவைகளை பூர்த்தி செய்யாவிட்டால் நிலைமை மேலும் மோசமாகும் - இவ்வாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.** 11 ➤

## சடுதியாகக் குறைந்தது கோதுமை மா விலை

### மொத்தவிலை இனி 290 ரூபா

கொழும்பு, ஒக். 15
சந்தையில் கோதுமை மாவின் விலை தற்போது குறைவடைந்துள்ளதாக அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதியாளர்கள் சங்கத்தின் பேச்சாளர் நிஹால் செனவிரத்ன தெரிவித்துள்ளார். 11 ➤

## குடும்பத்தலைவர் மீது கொள்ளையர்கள் கத்திவெட்டு

### வல்வெட்டித்துறையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 15
வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீடு ஒன்றுக்குள் புகுந்த கொள்ளையர்கள், குடும்பத்தலைவரை கத்தியால் வெட்டிக் காயப்படுத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். நேற்று அதிகாலை ஒருமணி 11 ➤

## இந்தியாவுடன் இணைந்தே திருமலையில் அபிவிருத்தி

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

திருகோணமலை, ஒக். 15
திருகோணமலை மாவட்ட மூலோபாய அபிவிருத்தித் திட்டமானது தேர்தலை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படவில்லை என்றும், இது அடுத்த 11 ➤



## இன, மத வன்முறைக்கு இனிமேல் இடமில்லை!

### இப்படிச் சொல்கிறார் ரணில்

திருகோணமலை, ஒக். 15
இந்த நாட்டில் இனிமேல் இன, மத வன்முறைகளுக்கு இடமில்லை. அனைவரும் சுதந்திரமாக நடமாடும் நிலைமை தொடர்ந்து நீடிக்கும் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் 11 ➤



வல்வெட்டித்துறைப் பகுதியில்

## வீடுகள் உடைத்துத் திருட்டு மூவர் பொலிஸாரால் கைது!

### 10 பவுண் நகைகளும் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 15
வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அண்மையில் இரண்டு வீடுகளை உடைத்து திருடிய சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று 11 ➤

கோப்பாய் பொலிஸ் பிரிவில்

## போதை வியாபாரிகள் ஐவர் நேற்றுக் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 15
கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், உயிர்கொல்லிப் போதைப்பொருளான 11 ➤

## வடமாகாணத்தில் பரவலாக மழை!

யாழ்ப்பாணம், ஒக். 15
இரண்டாவது இடைப்பருவம் காரணமாக வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் மழைக்கு வாய்ப்புள்ளது என்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக புவியியல்துறை விரிவுரையாளர் 11 ➤

## நாவாந்துறையில் விபத்து; குடும்பத்தலைவர் இறப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 15
யாழ்ப்பாணம் நாவாந்துறை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் குடும்பத்தலைவர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிளும் 11 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நீதி நியாயமிக்க சமுதாயத்துக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும், முன்னாள் சபாநாயகருமான கருஜெயசூரிய 'உதயன் பணிமனைக்கு' நேற்று வருகை தந்தார். அவரை உதயன் குழுமத்தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் மற்றும் அவரது பாரியார் திருமதி யசோதை சரவணபவன் ஆகியோர் வரவேற்றனர்.

# சட்டவிரோத மணல் அகழ்வு; தடுப்போருக்கு அச்சுறுத்தல்

*மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு*

**கிளிநொச்சி, ஒக். 15**

**சட்டவிரோத மணல் அகழ்வுக்கு எதிராக செயற்பட்ட சமூக செயற்பாட்டாளர் ஒருவருக்கு சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுவோரால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தின் கிளிநொச்சிக் கிளையில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.**

கிளிநொச்சி -இரணைமடுக்குளத்தின் கீழ் பகுதியிலும் அதனை அண்டிய பிரதேங்களிலும் இடம்பெற்றுவரும் சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட கிளிநொச்சி திருவையாறு கிராமத்தைச் சேர்ந்த குமாரசாமி தர்மராசா என்பவரே தனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது என முறைப்பாடு பதிவுசெய்துள்ளார்.

அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளதாவது:-

விவசாயத்துக்கு உயிர்நாடியாக விளங்கும் இரணைமடுக்குளத்துக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் தொடர் சட்டவிரோத மணல் அகழ்வு மேற்கொள்ளப்படுகிறது.

இதுதொடர்பில் உரிய அதிகாரிகளோ பொலிஸாரோ எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

மாறாக தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதோடு அதனைத் தடுப்போருக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது.

குழுவாக வீடுகளுக்குள் நுழைந்து வெடிகளைக் கொளுத்திப் போடுதல் மற்றும் எச்சரிக்கை விடுதல் என்பன போன்ற தொடர் அச்சுறுத்தல் நடவடிக்கைகளில் சிலர் ஈடுபடுகின்றனர்.

இதுதொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டபோதும் பொலிஸார் அசமந்தப் போக்கையே கடைப்பிடிக்கின்றனர்.

இந்தநிலையிலேயே மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-214)

*உறவினர் கண்முன்*

# மனைவியைத் துன்புறுத்திய கணவர் மீது கோடரிவீச்சு!

*கச்சாயில் சம்பவம்*

சாவகச்சேரி, ஒக். 15

கோடரியால் தாக்கப்பட்டு கை துண்டாடப்படும் நிலையில் ஒருவர் யாழ். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை சாவகச்சேரி- கச்சாய் வீதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

மனைவியுடன் வாக்குவாதம் மேற்கொண்டு தாக்கிய கணவரை, மனைவியின் உறவினர் ஒருவர் தடுக்கச் சென்றுள்ளார். ஆயினும் கணவர் மனைவியை தொடர்ந்து தாக்கியதையடுத்து ஆத்திரமடைந்த உறவினர் கண்டங்கோடரியால் கணவரைத் தாக்கியுள்ளார். கணவர் கையில் ஆழமான படுகாயத்துக்குள்ளாகிய நிலையில் அங்கிருந்தோரால் மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து கோடரியால் தாக்கியவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-9)

# மாடுகள் கடத்தல் நபரொருவர் கைது



வவுனியா, ஒக். 15

வவுனியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நொச்சிமோட்டைப் பகுதியில் உரிய அனுமதிப்பத்திரங்கள் இல்லாமல் மாடுகளை வாகனத்தில் ஏற்றிச்சென்ற நபரொருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஓமந்தை பகுதியிலிருந்து சம்மாந்துறை நோக்கி மாடுகளை ஏற்றிசென்ற மேற்படி வாகனத்தை, வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜே.ஏ.ஏ.எஸ்.ஜெயக்கொடி தலைமையிலான பொலிஸ் குழுவினர் நொச்சிமோட்டை பகுதியில் வழிமறித்து சோதனையை முன்னெடுத்தபோதே இந்தக் கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது. குறித்த வாகனத்தின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், கடத்தப்பட்ட 11 மாடுகளும், அவற்றைக் கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட வாகனமும் பொலிஸாரின் கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. (அ-ம-18)

# போதைப்பொருளை வாங்கப் பணமில்லை

*கையை பிளேட்டால் காயப்படுத்தியவர் மருத்துவமனையில் சேர்ப்பு*

யாழ்ப்பாணம், ஒக். 15

உயிர்கொல்லி போதைப்பொருளை கொள்வனவு செய்ய பணம் கிடைக்காத நிலையில் தனது கையை பிளேட்டால் வெட்டி காயப்படுத்திய நிலையில் ஒருவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி - நுணாவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

42 வயதுடைய குடும்பத்தலைவர் ஒருவரே இவ்வாறு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை - அண்மைக்காலமாக போதைப்பொருள் பாவனை வடக்கு மாகாணத்தில் அதிகரித்துள்ளதுடன் அவற்றால் பல்வேறு சமூகச் சீரழிவுகளும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-9)

# தீப்பெட்டிக்குள் போதைப்பொருள்

*பெண் கைது!*

கொழும்பு, ஒக். 15

மார்புக் கச்சைக்குள் தீப்பெட்டியை மறைத்து அதற்குள் ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிறைச்சாலையிலிருந்து பாணந்துறை நீதிமன்றத்துக்கு அழைத்துவரப்பட்ட கைதியான தனது தந்தைக்கு வழங்குவதற்காகவே குறித்த பெண் தீப்பெட்டிக்குள் ஐஸ் போதைப்பொருளை வைத்து அதை மார்புக் கச்சைக்குள் மறைத்து எடுத்துவந்துள்ளார் என்று விசாரணை களில் தெரியவந்தது.

கைதுசெய்யப்பட்ட பெண் மொரட்டுவ - மொட்டுமுல்லையைச் சேர்ந்த 29 வயதானவர் என்றும் பெண்ணை பாணந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-14.இ)

# நன்கொடை ஒருங்கிணைப்பை விரிவாக்க ஐ.எம்.எப்.முயற்சி

கொழும்பு, ஒக். 15

இலங்கை போன்ற நடுத்தர வருமானம் பெறும் நாடுகளுக்கு நன்கொடையாளர் ஒருங்கிணைப்பை விரிவாக்கும் வழிகளைத் தேடும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜிஹேவா செய்தியாளர் சந்திப்பொன்றில் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் பயனுள்ள கடன் தீர்வுப் பொறிமுறைக்கும் நடுத்தர வருமானம் பெறும் நாடுகளை வலியுறுத்துகிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிப்புலன் இழந்தோரும் வாழ்வில் பல உச்சங்களைத் தொடவேண்டும்

## சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினச் செய்தியில் வாழ்வகத்தின் தலைவர் ரவீந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 15

**உன்னதமான மனிதப் பிறவி வாய்க்கப்பெற்ற நாம் அந்தப் பிறவியின் உச்சங்களைச் சற்றேனும் எட்டிப்பார்க்கவேண்டும். உயர்வாய், மகிழ்வாய் மதிப்புடன் வாழவேண்டும். விழிப்புல வலுவிழந்தோரும் இதற்கு விதிவிலக்கானவர்கள் அல்லர் - இவ்வாறு தனது சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினச் செய்தியில் தெரிவித்துள்ளார் வாழ்வகத்தின் தலைவர் ஆறுமுகம் ரவீந்திரன்.**

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் இன்று கடைப்பிடிக்கப்படுகின்றது. அதனை முன்னிட்டு அவர் அனுப்பிய ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உன்னதமான மனிதப் பிறவி வாய்க்கப் பெற்ற நாம் அந்தப் பிறவியின் உச்சங்களைச் சற்றேனும் எட்டிப்பார்க்கவேண்டும். உயர்வாக, மகிழ்வாக மதிப்புடன் வாழவேண்டும். விழிப்புல வலுவிழந்தோரும் இதற்கு விதிவிலக்கானவர்கள் அல்லர்.

விழிப்புல வலுவிழப்பு ஒரு குறையென்ற போதிலும் அது உங்கள் நல்வாழ்வுக்கு ஒருபோதும் தடையாகாது என்பதை உங்கள் மனங்களில் ஆழப் பதித்துக் கொள்ளுங்கள்.

'உங்களால் முடியாது' என்று மற்றவர்கள் கூறுகின்ற வார்த்தைகளைத் தூக்கி யெறிந்துவிட்டு கடுமையாக முயற்சி செய்யுங்கள். அவர்கள் உரைத்தது பொய் என்பதை அப்போது நீங்கள் புரிந்துகொள்வீர்கள்.

உடன்பிறப்புக்களே, கண்களுக்குப் பதிலாய் உங்கள் வாழ்வில் ஒளிதர வல்லது கல்வி மட்டுமே என்பதை ஒருபோதும் மறந்துவிடாதீர்கள். 'பிச்சை புகினும் கற்கை நன்றே' என்ற ஆன்றோர் வாக்கு உங்களுக்காகவே உரைக்கப்பட்டது என எடுத்துக்கொள்ளுங்கள். உங்கள் மீது மட்டுமல்ல, உங்கள் உடன்பிறப்புக்கள் மீதும் கல்வி வெளிச்சம் படவேண்டும் என்பதற்காகப் பணிசெய்யுங்கள்.

குறிப்பாக, விழிப்புலவலுவிழந்த பெண்களின் வாழ்க்கைத்தர மேம்பாடு பற்றி அதிகமதிகமாய் சிந்தியுங்கள். ஏனெனில், விழிப்புலவலுவிழந்தோரில் அதிகம் தீங்குறுபவர்களாக அவர்களே காணப்படுகின்றனர்.

உன்னத இலட்சியங்களும் உழைப்பும் விடாமுயற்சியும் உடைய ஒரு மனிதனின் முன்னால் எதுவும் தடையாக நிற்க முடியாது. அனைவருக்கும் என் இதயம் நிறைந்த சர்வதேச வெள்ளைப்பிரம்பு தின வாழ்த்துக்கள் - என்றுள்ளது. (ம)

# பல்வேறு திருட்டுகள் இருவர் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஒக். 15

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வட்டுக்கோட்டை அராலி பகுதியில் கடந்த மாதம் வீடுடைத்து திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றன எனக் கிடைத்த முறைப்பாடுகளுக்கமைய மேற்கொள்ள விசாரணையின்போதே இந்தக் கைது இடம்பெற்றது. சந்தேகநபர்களிடமிருந்து ஐந்தரைப் பவுண் நகைகள் மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அராலி பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞரொருவரை கைதுசெய்து விசாரணைக்குட்படுத்தியபோது குறித்த நபர் திருடிய நகையை வேறொருவருக்கு விற்பனை செய்யப்பட்டதன் அடிப்படையில் மற்றுமொரு சந்தேகநபரையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரையும் மேலதிக விசாரணையின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (ச-125)

# மைத்திரிபால மீதான வழக்கு ஒத்திவைப்பு!

கொழும்பு, ஒக். 15

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீதான தனிப்பட்ட முறைப்பாட்டு வழக்கை 10 வாரங்களுக்கு ஒத்திவைக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் கோட்டை நீதிவானுக்கு உத்தரவிட்டுள்ளது.

ஏப்ரல் குண்டுத்தாக்குதல் தொடர்பில் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட தனிப்பட்ட முறைப்பாடு தொடர்பான விசாரணையை இடைநிறுத்தி உத்தரவு பிறப்பிக்கக்கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் மைத்திரிபால சிறிசேனவால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையானார்.

அதன்போது குறித்த வழக்கை எதிர்வரும் 10 வாரங்களுக்கு ஒத்திவைக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் கோட்டை நீதிவானுக்கு உத்தரவிட்டுள்ளனர். (ச-22)

## யாழ்ப்பாணத்தில்

# கட்டடமொன்றில் இருந்து இளைஞரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 15

யாழ்.போதனா மருத்துவமனை வீதியில் வேம்படி சந்திக்கு அண்மையில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் கட்டடம் ஒன்றின் மேற்தளத்திலிருந்து வீழ்ந்து உயிரிழந்த நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி பகுதியை சேர்ந்த அன்னலிங்கம் கிரிசாந் (வயது-38) என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

புதிதாகக் கட்டப்பட்டு வரும் குறித்த கட்டடத்தில் வேலை செய்யும் சிலர் நேற்றுமுன்தினம் இரவு அருகிலுள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றுக்குச் சென்று மது அருந்தி விட்டு விடுதிப் பணியாளர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர். பின்னர் அங்கிருந்து வெளியேறி தாம் வேலைசெய்யும் கட்டடத்துக்கு வந்துள்ள நிலையில் அவர்களில் ஒருவரே கட்டடத்தின் மேல்தளத்திலிருந்து வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

கட்டடத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி காணொலிகள் மூலம், குறித்த நபர் நிலைதடுமாறி படிக்கட்டுக்களில் வீழ்ந்து தலையில் ஏற்பட்ட காயம் காரணமாகவே உயிரிழந்துள்ளார் என்று தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அதேநேரம், கைகலப்பில் படுகாயமடைந்த நபரைத் தாக்கிய குற்றச்சாட்டில் எட்டுப் பேர் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். அதுதொடர்பில் பிறிதொரு வழக்குத் தாக்கல்செய்து நீதிமன்றில் அவர்கள் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-ச-26)

# வேலைவாய்ப்பு நேர்முகத்தேர்வு

சாவகச்சேரி, ஒக். 15

வெளிநாட்டு வேலை வாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கான முதலாம் கட்ட நேர்முகத் தேர்வு, தென்மராட்சிப் பிரதேச செயலக ஏற்பாட்டில் பிரதேச செயலக மண்டபத்தில் நாளைமறுதினம் திங்கட்கிழமை, 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 19 ஆம் திகதி புதன்கிழமை ஆகிய தினங்களில் இடம்பெறவுள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் வழிகாட்டலில் நடத்தப்படவுள்ள நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள ஆர்வமுள்ளவர்கள் தங்களிடமுள்ள தொழில்தகைமைச் சான்றிதழ்கள் மற்றும் ஏனைய ஆவணங்களுடன் காலை 9 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் இடையில் பிரதேச செயலகத்துக்கு சமூகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14,9)





# யாழ். கோட்டையில் சமூகப்பிறழ்வு குற்றச்சாட்டு: பற்றைகளை அகற்றித் துப்புரவு

யாழ்ப்பாணம், ஒக். 15

யாழ்ப்பாணக் கோட்டை மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளைத் தூய்மைப்படுத்தல் செயற்றிட்டம் நேற்று வெள்ளிக்கிழமை காலை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பகுதியில் இடம்பெறும் சமூகப் பிறழ்வான நடவடிக்கைகள் மற்றும் போதைப்பாவனை என்பன இடம்பெறுகின்றன எனப் பல்வேறு தரப்பினராலும் சுட்டிக்காட்டப்பட்டு வந்தமையடுத்து அதனைக் கட்டுப்படுத்தல் முகமாக இந்தத் தூய்மைப்படுத்தல் செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டது.

தொல்பொருள் திணைக்களம், யாழ். மாநகர சபை, யாழ்.பிரதேச செயலகம் ஆகியவை இணைந்து இந்தச் செயற்றிட்டத்தில் ஈடுபட்டன.

இதன்போது தொல்பொருள் திணைக்களத்தினர், யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள், யாழ். பிரதேச செயலகப் பணியாளர்கள், சமூக மட்ட அமைப்புக்கள், தன்னார்வ தொண்டு அமைப்புக்கள், இளையோர் அமைப்புக்கள் எனப் பலரும் பங்கேற்று துப்புரவுப் பணியில் ஈடுபட்டனர். (ச-17,20)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திக்கம் வடிசாலை தனியாருக்கு வழங்கப்படுதல் இடைநிறுத்தம்

## மாற்று நடவடிக்கை தீர்மானிக்கப்படுமென அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஒக். 15**

**வடமராட்சி, திக்கம் வடிசாலையை தனியார் நிறுவனத்துக்கு வழங்கும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு மாற்றுத் திட்டங்கள் தொடர்பில் கொழும்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.**

திக்கம் வடிசாலையை தனியார் நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்காது கூட்டுறவாளர்களே தொடர்ந்தும் நடத்துதல் தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரன் தலைமையில் வடமராட்சி வடக்குப் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நிகழ்வில் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண, கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை, பனை அபிவிருத்தி சபைத் தலைவர், வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர், யாழ். மேலதிக மாவட்டச் செயலர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

அதன்போது யாழ்ப்பாண மாவட்டத்தின் மரபுசார்ந்த உற்பத்திக் கைத்தொழில் நிலையங்களில் ஒன்றான திக்கம் வடிசாலை ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக அரசியல் காரணங்களால் செயற்படுத்தப்படாதுள்ளது. இதனால் அங்கிருந்த பல கோடி ரூபா பெறுமதியான பனம் சாராயம் உற்பத்தி செய்யும் உபகரணங்கள் பழுதடைந்துள்ளன. அதற்கமைய அதனை மீள இயக்குவதற்கு, தனியார் ஒருவரிடம் வழங்குவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இதன்போது தனியாருக்கு, ஒருபோதும் வடிசாலையை வழங்கமுடியாது. வடக்கு மாகாணம் மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு உட்பட்ட பனை, தென்னை வள உற்பத்தியாளர்கள், கூட்டுறவாளர்களே தொடர்ந்தும் நடத்துதல்வேண்டும் என சங்கங்களின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

இதனையடுத்து பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண, திக்கம் வடிசாலையை தனியார் நிறுவனத்துக்கு வழங்கும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு மாற்றுத் திட்டங்கள் தொடர்பில் கொழும்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (ச-63)

# மறவன்புலவு விவசாயிகளுக்கு யூரியா

சாவகச்சேரி, ஒக்.15

தென்மராட்சி தெற்கு மறவன்புலவு கமக்கார அமைப்புக்குட்பட்ட காலபோக நெற்செய்கை விவசாயிகளுக்கு கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை யூரியா உரம் வழங்கப்படவுள்ளது.

அதற்கமைய இந்த ஆண்டு ஏக்கர் வரி செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு, சந்தாப் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை நிழல் பிரதி ஆகியவற்றுடன் மறவன்புலவு விவசாயிகளை வருகை தருமாறு கமநல சேவைகள் அமைப்பின் தலைவர் சி.திருஞானசம்பந்தர் அறிவித்துள்ளார். அத்துடன் விவசாயிகளுக்கு உரம் வழங்குவதற்கு தென்மராட்சி தெற்கு மறவன்புலவு கமக்கார அமைப்பின் தலைவரின் இல்லத்திலும் மறவன்புலவில் உள்ள செயலாளரின் இல்லத்திலும் விவசாயிகளின் பதிவுகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. அதன்படி, அமைப்புக்குட்பட்ட விவசாயிகள் உரம் பெறுவதற்கான பதிவுப் படிவத்தைப் பூர்த்தி செய்து வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14,9)

# வசாவிளான் மத்திய கல்லூரியில் போதைப்பொருள் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஒக். 15

உலக உளநல தினத்தை முன்னிட்டு 'போதைப்பொருள் பாவனை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவோம், மனந்திறந்து பேசுவோம்' என்ற தொனிப்பொருளில் விழிப்புணர்வு செயலமர்வு வசாவிளான் மத்திய கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது.

வசாவிளான் மானம்பிராய் பிள்ளையார் அறக்கட்டளை நிதியத்தின் அனுசரணையில் அமெரிக்காவில் வசிக்கும் லோகநாதன் வரதராசாவின் நிதிப்பங்களிப்பில் விழிப்புணர்வு செயலமர்வு இடம்பெற்றது. இதன்போது 400 தென்னங்கன்றுகளும், விதைகளும் வழங்கப்பட்டன.

செயலமர்வில் தெல்லிப்பழைப் பிரதேசசெயலக போதை ஒழிப்புப் பிரிவு உத்தியோகத்தர், தென்னைப்பயிர்ச்செய்கை அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராமஅலுவலர், பெற்றோர், மாணவர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர். (ஒ-14)



# விவசாயிகளுக்கான சலுகைகள் எதுவும் நடைமுறையில் இல்லை

## மன்னார் விவசாயிகள் கவலை

மன்னார், ஒக். 15

விவசாயிகளுக்கு பல சலுகைகள் வழங்கப்படும் என்று அரசாங்கத்தால் அண்மையில் அறிவிக்கப்பட்ட போதிலும் அவை எதுவும் தற்போது வரை நடைமுறைக்கு வரவில்லை என்று மன்னார் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.


மன்னார் கட்டுக்கரைக்குளத்தின் கீழ் 2022/2023 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படும் காலபோக நெற்செய்கை தொடர்பான கூட்டம் மன்னார் மாவட்டச்செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தலைமையில் உயிலங்குளத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலே மன்னார் மாவட்ட விவசாயிகளின் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு கவலை தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த காலபோக நெற்செய்கையில் இரசாயன பசளை விநியோகத்தை இடைநிறுத்தி அனைத்து விவசாயிகளும் சேதனப் பசளையை பயன்படுத்தியே நெற்செய்கையை முன்னெடுக்கவேண்டும் என அரசு வலியுறுத்தி இருந்தது. இதன் காரணமாக மன்னார் மாவட்டத்தில் அதிகமான விவசாயிகள் பெரும் பாதிப்புகளுக்குள்ளாகி இருந்தனர். அதன்போது பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்படும் என்று அரசாங்கம் அப்போது அறிவித்திருந்தது. ஆனால், இன்று வரை அது நடை முறைக்கு வரவில்லை. அத்துடன் வங்கிகளில் விவசாயக்கடன் பெற்றவர்களுக்கு அந்தக் கடன் தள்ளுபடி செய்யப்படும் எனவும் அரசாங்கத்தால் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இதுவும் விவசாயிகளுக்கு ஒரு ஏமாற்றமாகவே இருந்து வருகின்றது - என்றனர். (ஒ-14,60)

# கனடாவில் கோரவிபத்து யாழ்.சகோதரர்கள் சாவு



யாழ்ப்பாணம், ஒக். 15

கனடாவில் மார்கம் டெனிசன் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற கோரவிபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சகோதரனும் சகோதரியும் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ட்ரக் வண்டியொன்றும் மற்றுமொரு வாகனமும் மோதிக் கொண்டதில் விபத்து இடம்பெற்றுள்ளது. இதில் யாழ்ப்பாணம் இணுவில் மஞ்சத்தடியைச் சேர்ந்த பூபாலசிங்கம் நிலா, பூபாலசிங்கம் பாரி ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

மேலும், இந்த விபத்தில் மற்றொருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். விபத்து குறித்த விசாரணைகளை அந்நாட்டு பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-இ)




# யூனிவேர்சிற்றி கிரிக்கெட் லீக் முதற்சுற்றுப்போட்டிகள் இன்று

யாழ்ப்பாணம், ஒக். 15

யூனிவேர்சிற்றி கிரிக்கெட் லீக்கின் முதற்சுற்றுப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக ஆடுகளத்தில் ஆரம்பமாகவுள்ளன. 6 அணிகள் பங்குபற்றவுள்ள சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பணியாளர்களிடையே புரிந்துணர்வையும், நட்புறவையும் நிலைபெறச் செய்யும் நோக்குடன் நடத்தப்படவுள்ள யூனிவேர்சிற்றி கிரிக்கெட் லீக்கின் வெற்றிக்கிண்ண அறிமுக நிகழ்வு, யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் அணிகளின் உரிமையாளர்கள், முகாமையாளர்கள், அணித் தலைவர்கள், வீரர்களின் முன்னிலையில் பல்கலைக்கழகப் பதிவாளர், நிதியாளர் மற்றும் அதிகாரிகள், பணியாளர்களுடன் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா வெற்றிக் கிண்ணத்தை அறிமுகம் செய்தார். இதன்போதே போட்டி நடத்தப்படும் திகதிகள் வெளியிடப்பட்டன. (ஒ-14, 27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## தேர்தல் முறைமையை மாற்றவேண்டும்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் தொடர்ச்சியாக கருத்து வெளியிட்டு வருகின்றார். விருப்பு வாக்கு கலாசாரம் இல்லாதொழிக்கப்படவேண்டும் என்று அவர் வலியுறுத்தியிருந்தார். அதுதான் பல அரசியல் கட்சிகளினதும் நிலைப்பாடும் கூட. இதேவேளை, உள்ளூராட்சி தேர்தல் மறுசீரமைப்புத் தொடர்பில் அவர் வெளியிட்ட கருத்து பலத்த சல சலப்பை ஏற்படுத்தியுள்ளது. உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்வதற்கு தயங்கியே அதை தேர்தல் மறுசீரமைப்பு என்ற பெயரில் ஒத்திவைக்க முயல்கின்றார் என்று ஜனாதிபதி மீது சரமாரியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

அந்தக் குற்றச்சாட்டுக்களை வெறுமனே புறந்தள்ளவும் முடியாது. ஏனெனில் நல்லாட்சி அரசின் காலத்தில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தியபோது ஆளும் கட்சி படுதோல்வியைச் சந்தித்தது. அதனைத் தொடர்ந்து, மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் காலத்தை இழுத்தடிக்கும் மிக மோசமான நடவடிக்கையை ரணில் கையாண்டிருந்தார். மாகாணசபைத் தேர்தல் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருவதாகத் தெரிவித்து, அரசாங்கம் சமர்ப்பித்த யோசனையை ஆளும் தரப்பினரே ஒட்டுமொத்தமாக எதிர்த்து தோற்கடித்ததால், இன்று வரையில் மாகாணசபைத் தேர்தலை நடத்த முடியாத கைங்கரியத்தைச் செய்தவர் ஜனாதிபதி ரணில்தான்.

ஆனால், உள்ளூராட்சி தேர்தல் சட்ட சீர்திருத்தம் மேற்கொள்ளப்படாமல் தற்போதைய கலப்பு முறையில் மீண்டும் தேர்தலை நடத்துவது பொருத்தமற்றது. கடந்த தடவை உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது முதன் முறையாக 60:40 என்ற அடிப்படையில் கலப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. தொகுதிவாரி மற்றும் விகிதாசாரம் என்ற அடிப்படையில் அது பிரயோகிக்கப்பட்டது.அந்தத் தேர்தலில் நாடு முழுவதிலும் 80 சதவீதத்துக்கும் அதிகளவான உள்ளூராட்சி மன்றங்கள் தொங்கு முறையிலேயே அமைந்தன. எந்தவொரு தரப்பும் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்று உறுதியான ஆட்சியை அமைக்க முடியவில்லை. அதனை விட ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்துக்கும் ஒதுக்கப்பட்ட ஆசன எண்ணிக்கையை விட மேலதிக ஆசனங்களையும் ஒதுக்கவேண்டிய ஒரு சமச்சீரற்ற முறைமையும் காணப்பட்டது.


இவ்வாறு அமைந்த உள்ளூராட்சி மன்றங்களின் திருக்கூத்துக்களை தினமும் கண்டுகொண்டிருக்கின்றோம். உறுதியான ஆட்சி அமையாததால், உள்ளூராட்சி மன்றங்களால் திறம்பட நிர்வாகத்தை கொண்டு நடத்தவும் முடியவில்லை. அதனைவிட வரவு – செலவுத் திட்டங்களை தோற்கடித்து ஆட்சியைக் கவிழ்த்த சம்பவங்களும் தாராளமாக அரங்கேறியிருந்தன. இப்படி மோசமானதொரு அனுபவத்தை தந்த கலப்பு முறையிலான உள்ளூராட்சித் தேர்தல் மீண்டும் நடத்தப்பட்டு 8 ஆயிரம் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவதிலும் பார்க்க 4 ஆயிரம் உறுப்பினர்களுடன் 70:30 என்ற அடிப்படையில் கலப்பு தேர்தல் முறையில் உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதே பொருத்தமாக இருக்கும். மேலதிக ஆசன ஒதுக்கீட்டு முறையையும் நீக்குவது மிகவும் சிறப்பானதாக அமையும்.

தேர்தலை ஒத்திவைப்பதற்கான கேடயமாக தேர்தல் திருத்தத்தை கையில் எடுக்காமல், அந்தத் தேர்தல் முறையின் பலவீனங்களை களைவதற்கான ஆயுதமாக அதனைப் பாவிக்க ரணில் முன்வரவேண்டும். திருத்தத்தை கொண்டுவருவதாயின் அதனை மிகக் குறுகிய காலத்தினுள் நிறைவேற்றி, தேர்தலை நடத்துவதும் ஜனாதிபதியின் பொறுப்பாகும். ஆனால் அதையெல்லாம் ரணில் செய்தால் அது அதிசயம்தான்.

நாளொரு நல்வார்த்தை

“ உங்களின் பணிவு உங்களின் முன்னேற்றமாக மாறும்!”

- ரமணர்



# தேர்தல்களுக்கு வாய்ப்பில்லை

## ஐ.தே.க. தவிசாளர் திட்டவட்டம்

கொழும்பு, ஒக். 15



**நாட்டில் எதிர்வரும் மாதங்களில் எந்தத் தேர்தலையும் நடத்துவதற்கு வாய்ப்பில்லை. நாட்டை உறுதிப்படுத்துவதற்கான தேசிய கொள்கைக் கட்டமைப்பை வகுத்த பின்னரே தேர்தல் நடத்தப்படும் - இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் நாடாளு மன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது-;
இது தேர்தலை நடத்துவதற்கான நேரம் அல்ல. தேர்தலுக்கு அழைப்பு விடுப்பவர்கள் நாட்டைச் சீர்குலைக்க விரும்புபவர்கள். தேசத்தைச் சீர்குலைக்க நினைக்கும் இந்தச் சக்திகள் விரைவில் ஓரங்கட்டப்படுவர்.
உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை தற்போதைய 8 ஆயிரத்திலிருந்து 4 ஆயிரமாகக் குறைப்பதும், ஆட்சியின் அனைத்து அடுக்குகளிலும் உள்ள விருப்பு வாக்கு முறையை இல்லாதொழிப்பதும் அவசியம். விவேகமுள்ள எவரும் இதை எதிர்ப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை, என்றார். (ஒ-22)

# பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுகிறது சீனா

## சிறீதரன் எம்.பி சாட்டை

யாழ்ப்பாணம், ஒக். 15
சீனா தனது வல்லரசுப் போட்டிக்கான களமாக சிறிலங்காவையும் அதனை அடைவதற்கான பகடைக்காய்களாக ஈழத் தமிழர்களையும் பயன்படுத்த எத்தனிக்கிறது. ஒருபோதும் இனப்பிரச்சினைக்குத் தீர்வை சீனா பெற்றுத்தராது - இவ்வாறு கரைச்சி பிரதேச சபையின் பண்பாட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் நாடாளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இந்தியப் பிரதமர் மோடி சிறிலங்காவுக்கு வருகை தந்தபோது, சிறிலங்காவுக்கு கூட்டுறவு சமஷ்டி முறையில் தீர்வு காண்பதே சிறந்தது என தீர்க்கமாக வலியுறுத்தியிருந்தார்.
இதன்மூலம் ஈழத்தமிழர்களுக்கான இனப்பிரச்சினைக்கான தீர்வை வழங்குவதாக இருந்தால் அது இந்தியா ஒன்றினாலேயே முடியும் என அவரது உரை வெளிச்சமிட்டு காட்டியிருந்தது.
ஆகவே, இந்திய பிராந்திய வல்லரசின் அனுசரனையின்றி தமிழர்களுக்கு ஒருபோதும் தீர்வு எட்டப்படாது என்பது நிதர்சனமான உண்மை.
ஆனால், சீனா தனது வல்லரசுப் போட்டிக்கான களமாக இலங்கையையும் அதனை அடைவதற்கான பகடைக்காய்களாக ஈழத் தமிழர்களையும் பயன்படுத்த நினைக்கிறது. ஒருபோதும் இனப்பிரச்சினைக்கான தீர்வை சீனா முன்வைக்காது - என்றார். (ச-125)

நாளை
16.10.2022
ஞாயிற்றுக்கிழமை
புரட்டாதி - 29

சுபநேரம் : 09.02 - 10.32
ராகுகாலம்: 04.32 - 06.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலட்டைப் பண்ணைக்கு எதிராக கிராஞ்சியில் தொடர் போராட்டம்!

கிளிநொச்சி, ஒக். 15

பூநகரி பிரதேசசெயலகத்துக் குட்பட்ட இலவன்குடா கிராஞ்சி பிரதேசத்தில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட கடலட்டைப் பண்ணைக்கு எதிராக அந்தப்பகுதி மீனவ சமூகங்களால் முன்னெடுக்கப்படும் தொடர் போராட்டம் கடந்த புதன் கிழமை 14 ஆவது நாளாக இடம்பெற்றது.

போராட்டத்தில் கலந்துகொண்ட மீனவர்கள் தெரிவிக்கையில்;

இலவன்குடா கிராஞ்சி கடற்கரையோரம் முழுவதும் சட்டவிரோதமாக கடலட்டைப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் சிறு மீன்பிடிக் கரையோரத் தொழிலாளர்களாகிய எமக்கு, மீன்பிடித் தொழிலை முன்னெடுப்பதில் பல தடைகள் காணப்படுகின்றன.

இது தொடர்பில் பொறுப்பு வாய்ந்த அரச அதிகாரிகள், திணைக்களங்கள் எவையும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை - என்றனர். (ஓ-14.20)


## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பூவுலகில் 01 - 01 - 1981

விண்ணுலகில் 18 - 10 - 2011



### அமரர் செல்லத்துரை வினோகரன்

திதி: ஷஷ்டி (15.10.2022)

ஆண்டுகள் பதினொன்று ஆனதென்று
அழுதிங்கு புலம்புகின்றோம்
கோடி ஆண்டுகள் ஓடியிங்கு போனாலும்
அழியாது என்றென்றும் அழகான
- உன் நினைவுகள்
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை
- பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

இடைக்குறிச்சி மேற்கு,
வரணி.

குடும்பத்தினர்

(cs.46197) (2.6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 01 - 01 - 1940

மறைவு 27 - 09 - 2021



### அமரர் கணபதிப்பிள்ளை இந்திரராசா
### (இந்திரன் மாஸ்டர்)

திதி : சஷ்டி [15.10.2022]

(முன்னாள் பிரதி அதிபர்,சுழிபுரம் யா/விக்ரோரியாக் கல்லூரி, பிரபல சமூக சேவையாளரும், சமூகத்தொண்டரும், முன்னாள் சுழிபுரம் பறாளை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய தர்மகத்தா சபை உறுப்பினரும், முன்னாள் ஆசிரியர் – சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயம், நாவலப்பிட்டி கதிரேசன் மத்திய மகாவித்தியாலயம், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி)

ஆண்டொன்று நகர்ந்தாலும்
நம்மைவிட்டு அகலாது உங்கள் நினைவுகள்
உங்கள் நினைவுகள் வருகையில்
நிலைகுலைந்து போகின்றோம்
உங்களை நினைக்காத நொடிகளில்லை
அன்பினால், பண்பினால், நட்பினால்
ஆளுமையால், விருந்தோம்பலால் கொடையால்
எங்கள் அனைவரது உள்ளங்களிலும்
குடியிருக்கும் உங்களை நாம் என்றென்றும் நினைத்திருப்போம்

உங்கள் ஆத்மா பறாளை விநாயகர், முருகன், பாதங்களில் சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

சுழிபுரம் மத்தி.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(CS 47095) (3/6)

# மரண அறிவித்தல்



தோற்றம்
07.04.1942

மறைவு
11.10.2022

## திருமதி கிருஷ்ணபிள்ளை அன்னம்மா

நட்டாங்கண்டல், மாங்குளத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கிருஷ்ணபிள்ளை அன்னம்மா கடந்த (11.10.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - சகுந்தலை தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும், வேலுப்பிள்ளை - பார்வதி தம்பதியினரின் அன்பு மருமகளும் கிருஷ்ணபிள்ளையின் பாசமிகு மனைவியும், உதயகுமார் (கனடா), தங்கேஸ்வரி, ஜெகதீசன் (தபால் உத்தியோகத்தர், உபதபாலகம்- நட்டாங்கண்டல்), உதயசந்திரிக்கா (கனடா), ஜீவலதா (கனடா), சுரேஸ்குமார் (கனடா), ரமேஸ்குமார் (கனடா), மதிவதனி (கனடா), சசிகுமார் (கனடா), மேகலதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருபாரமணி (கனடா), காலஞ்சென்ற திருச்செல்வம், செல்வரஜனி (முகாமைத்துவ உதவியாளர் காணிப் பதிவகம் கச்சேரி - வவுனியா), யோகநாதன் (கனடா), சாந்தகுமார் (கனடா), தாட்சாயினி (கனடா), பிரபோதினி (கனடா), விஜயகுமார் (கனடா), பிருந்தா (கனடா), சத்தியகாமன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியும், சரஸ்வதி, தங்கராசா, ஸ்ரீஸ்கந்தராசா (முன்னாள் உப தபாலதிபர், உபதபாலகம், நட்டாங்கண்டல்) விக்னராஜா (கனடா), சூரியகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தேவதாஸ், இராஜேஸ்வரி, காலஞ்சென்ற இந்திராகாந்தி மற்றும் சறோஜினிதேவி, நிர்மலா (கனடா), காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, விநாசித்தம்பி, நாகமணி, கந்தையா மற்றும் மகேஸ்வரன், சின்னம்மா, காலஞ்சென்ற பொன்னம்மா மற்றும் தங்கமணி, காலஞ்சென்ற சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியும், நிதிசரன், நிதுஷன், நிஷானி, நிலானி, திருமாறன், பத்மபிரியா (ஆசிரியை,மு/குமாரசாமி வித்தி.பாலிநகர்) செல்வசுதன், பிரகாஸ், அபிஷன், அனோஜன், கோபிநாத், துஷான், ராகவி, சதுர்ஷன், கனிகா, தினேஸ், விஷ்ணுகா, சாரினி , அபினயா, அபி, நதிஷா, திரிஷா, சபினா, யஷிகா, டெபோரா, ஜோன், சாருஜன், கபினாஸ், மைஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கின்சிகா, ஹறின், சயனிகா, தினேஸ், கபின்ராஜ், யசோதரன், துஷாரா, ஷெறினா, ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.10.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நட்டாங்கண்டல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு: ஜெகன் - 077 986 1385
வதனி - 076 841 6654

தகவல்:
குடும்பத்தினர்

(CS 21235) (3/6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.

# கேள்வி அறிவித்தல் - 2023.

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட நிலையங்களை 01.01.2023 இலிருந்து 31.12.2023 வரையான காலப்பகுதிக்கு நடாத்துவதற்காக குத்தகைக்கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் :- 15.10.2022 முற்பகல் 9.00 மணி தொடக்கம் 31.10.2022 பிற்பகல் 14.00 மணிவரை (அலுவலக நாட்களில் மட்டும்)**
**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி:- 2022.11.01 மு.ப 11.00 மணிவரை**
**கேள்வி திறக்கப்படும் திகதி :- 2022.11.01 மு.ப. 11.30 மணி**

| இல | குத்தகை வகை | மீளளிக்க முடியாத கேள்விப்படிவ கட்டணம் (NBT,VAT நீங்கலாக) | மீளளிக்ககூடிய கேள்வி வைப்புப்பணம் (NBT,VAT நீங்கலாக) | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (NBT,VAT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | **புதுக்குடியிருப்பு உப அலுவலகம்.** | | | |
| 1 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தையும் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையமும் (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | ***2,000.00*** | 60,000.00 | 5,720,000.00 |
| 2 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | ***2,000.00*** | 18,000.00 | 1,801,250.00 |
| 3 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கோழிறைச்சிக்கடை | ***2,000.00*** | 20,000.00 | 1,903,000.00 |
| 4 | உடையார்கட்டு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | ***2,000.00*** | 6,000.00 | 509,850.00 |
| 5 | உடையார்கட்டு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | ***2,000.00*** | 4,000.00 | 366,300.00 |
| 6 | உடையார்கட்டு பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | ***2,000.00*** | 2,500.00 | 76,630.00 |
| 7 | விசுவமடு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | ***2,000.00*** | 16,000.00 | 1,374,450.00 |
| 8 | விசுவமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | ***2,000.00*** | 7,000.00 | 702,900.00 |
| 9 | விசுவமடு பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | ***2,000.00*** | 10,000.00 | 844,965.00 |
| 10 | இரணைப்பாலை மாட்டிறைச்சிக்கடை | ***2,000.00*** | 3,000.00 | 239,305.00 |
| 11 | மந்துவில் பொதுச்சந்தை | ***2,000.00*** | 2,000.00 | 32,093.24 |
| 12 | மந்துவில் மாட்டிறைச்சிக்கடை (மட்டுப்படுத்தப்பட்டுள்ளது) | ***2,000.00*** | 2,000.00 | 30,360.00 |
| 13 | மந்துவில் கோழியிறைச்சிக்கடை (மட்டுப்படுத்தப்பட்டுள்ளது) | ***2,000.00*** | 2,000.00 | 20,900.00 |
| 14 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கருவாட்டுக்கடை(இல-01) | ***2,000.00*** | 2,000.00 | 35,201.00 |
| 15 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கருவாட்டுக்கடைஇல-02) | ***2,000.00*** | 2,000.00 | 35,201.00 |
| 16 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | ***2,000.00*** | 2,500.00 | 132,550.00 |
| 17 | புதுக்குடியிருப்பு சிறுவர்பூங்கா | ***2,000.00*** | 2,000.00 | 30,000.00 |
| 18 | புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதி பொது மலசலகூடம் | ***2,000.00*** | 2,000.00 | 20,000.00 |
| | **ஒட்டுசுட்டான் உப அலுவலகம்.** | | | |
| 1 | கற்சிலைமடு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | ***2,000.00*** | 2,000.00 | 53,350.00 |
| 2 | கற்சிலைமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | ***2,000.00*** | 2,000.00 | 52,800.00 |
| 3 | முத்துஐயன்கட்டு இடதுகரை பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | ***2,000.00*** | 2,000.00 | 45,265.00 |
| 4 | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | ***2,000.00*** | 3,000.00 | 269,500.00 |
| 5 | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | ***2,000.00*** | 2,500.00 | 207,130.00 |
| 6 | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | ***2,000.00*** | 5,000.00 | 464,200.00 |
| 7 | கற்சிலைமடு கோழியிறைச்சிக்கடை | ***2,000.00*** | 2,500.00 | 170,280.00 |
| 8 | ஒட்டுசுட்டான் கருவாட்டுக்கடை(இல-01) | ***2,000.00*** | 1,000.00 | 3,080.00 |
| 9 | ஒட்டுசுட்டான் ஆட்டிறைச்சிக் கடை | ***2,000.00*** | 2,000.00 | 30,000.00 |
| | **ஒலுமடு உப அலுவலகம்.** | | | |
| 1 | திருமுறிகண்டி கட்டண கழிப்பறை | ***2,000.00*** | 2,000.00 | 67,650.00 |
| 2 | மாங்குளம் கோழியிறைச்சிக்கடை | ***2,000.00*** | 3,000.00 | 192,000.00 |
| 3 | மாங்குளம் பொதுச்சந்தை | ***2,000.00*** | 4,000.00 | 283,800.00 |
| 4 | மாங்குளம் மாட்டிறைச்சிகடை | ***2,000.00*** | 2,000.00 | 27,596.80 |
| 5 | மாங்குளம் கருவாட்டுக்கடை | ***2,000.00*** | 1,000.00 | 3,080.00 |

## நிபந்தனைகள்.

01. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் மூலப் பிரதியினை தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு என்ற கேள்வி முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் இரு கேள்விகளும் கேள்வி திறத்தல் நேரத்திற்கு முன்பு கிடைக்கப்பெறல் வேண்டும்.

02. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது. சித்திகர கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை 2022.11.08 ஆம் திகதிக்கு பி.ப 2.00 மணிக்கு முன்னர் குத்தகை வைப்பாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ள வேண்டும். மிகுதித் தொகையினை 6 சமபங்குப் படி தை தொடக்கம் ஆனி வரையான காலப்பகுதிக்குள் அவ் மாதம் இறுதித் திகதிக்கு முன்னைய வேலைநாட்களில் செலுத்த வேண்டும். தவறுமிடத்து மாதக் கட்டணத் தொகையின் 10 வீதம் தண்டமும் மேலதிகமாக அறவிடப்படும். மேலதிக விபரத்தினை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

03. கேள்விப்பத்திரத்தினை பெற விரும்புவோர் பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்திய பிரதி, தாம் வதியும் கிராம சேவையாளரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வதிவிடத்தின் வதிவிட சான்றிதழ் மூலப்பிரதி ஆகியவற்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. வியாபாரம் நடைபெறும் போது பொதுமக்கள் இருபக்கமும் நிறையினை அவதானிக்கக்கூடிய தராசினை பயன்படுத்தல் வேண்டும்.

05. பொதுச்சந்தையை அண்மித்துள்ள இடங்களில் நடைபாதை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோரிடம் கட்டணம் அறவிடுவதன் மூலம் வியாபார நடவடிக்கையை ஊக்குவித்தல் கூடாது. அத்துடன் வியாபாரம் செய்வதற்கு அனுமதியளித்தல் கூடாது சபையின் அறிவுறுத்தல்களை பின்பற்றல் வேண்டும்.

06. புதுக்குடியிருப்பு மாட்டிறைச்சிக்கடையினை குத்தகைக்குப் பெற்றுக் கொள்பவருக்கு மாத்திரம் மந்துவில் மாட்டிறைச்சிக் கடைக்கான குத்தகை கேள்விப் படிவமும், புதுக்குடியிருப்பு கோழியிறைச்சிக் கடையினை பெற்றுக்கொள்பவருக்கு மாத்திரம் மந்துவில் கோழியிறைச்சிக் கடைக்கான குத்தகைக் கேள்விப் பத்திரமும் வழங்கப்படும். எவ்வாறாயினும் புதுக்குடியிருப்பு மாட்டிறைச்சிக்கடை, கோழியிறைச்சிக் கடைகளின் சித்தியாளர்களுக்கே மந்துவில் மாட்டிறைச்சிக்கடை, கோழியிறைச்சிக்கடை ஆகியவை வழங்கப்படும்.

07. பொதுச்சந்தையை குத்தகைக்கு பெறுபவர் சந்தைக்கு வரும் சந்தைப் பொருட்களின் மொத்தப் பெறுமதியின் 4% கட்டணத்திற்கு மேலதிகமாக அறவிடமுடியாது. மீன், மரக்கறிச்சந்தை வியாபாரிகளிடம் (புதுக்குடியிருப்பு, விசுவமடு பொதுச்சந்தைகள் தவிர்ந்த) இடத்திற்கு ஒருநாளிற்கு (4'X4') ரூபா 40.00க்கு மேற்படாமலும் கட்டணம் (இடவாடகையாக) அறவிடலாம். இதற்கு மேலதிகமாக எந்தவித கட்டணமும் அறவிடக்கூடாது. சந்தையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் [illegible] ரூபா 10.00ம் மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டிகள், ஒவ்வொன்றிற்கும் [illegible] 20.00ம் அறவிடலாம். அதற்கு மேலதிகமாக எந்தவித கட்டணமும் அறவிடக்கூடாது.

08. புதுக்குடியிருப்பு பொதுச்சந்தையினைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் (நாளொன்றிற்கு) பழக்கடை, வெற்றிலைக் கடைகளுக்கு ரூபா 100.00ற்கு மேற்படாமலும் மரக்கறிக் கடைகளுக்கு ரூபா 110.00ற்கு மேற்படாமலும், விசுவமடு சந்தைக் கடைகளுக்கு (நாளொன்றிற்கு) ரூபா 100.00ற்கு மேற்படாமலும் (இட வாடகையாக) அறவிடமுடியும்.

09. பொதுச் சந்தையில் மரக்கறி, கடலுணவு வகைகளின் கொள்விலை, விற்பனைவிலை என்பன காட்சிப்படுத்தல் வேண்டும்.

10. மரக்கறி, கடலுணவு மற்றும் இறைச்சிக்கடைகளில் அவற்றின் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தல் வேண்டும்.

11. திருமுறிகண்டி பொது மலசலகூடத்தினை குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்படும் கட்டணங்களுக்கு மேல் வரியோ அல்லது கட்டணமோ அறவிடக்கூடாது. (கட்டணத்திற்கான பற்றுச்சீட்டு வழங்கப்பட வேண்டும்.

12. இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் கடையினது கழிவுகளை தாங்களே அகற்ற வேண்டும். அத்துடன் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் கொல்களத்தினையே பயன்படுத்துதல் வேண்டும்.

13. இறைச்சி வகைகளுக்கான கட்டுப்பாட்டு விலையானது அரசாங்கதினால் தீர்மானிக்கப்பட்ட வர்த்தமானி, சுற்றுநிருபங்களுக்கு அமைவாகவும், சபையினால் தீர்மானத்திற்கு அமைவாகவும் விற்பனை செய்தல் வேண்டும்.

14. இறைச்சிக்கடைகளை மற்றும் கருவாட்டு கடைகளை குத்தகைக்கு பெறும் குத்தகைதாரர்கள் மாதமொன்றிற்கு ரூபா 500.00 இனை கடைவாடகையாக சபைக்கு செலுத்துதல் வேண்டும்.

15. கோழியிறைச்சிக் கடை குத்தகைக்காரர் ஊர்க் கோழிகள் உயிருடன் காட்சிப்படுத்தி உயிருடன் விற்பனை செய்தல் வேண்டும்.

16. கொல்களத்தில் அறுக்கப்படுவதற்கான விலங்குகள் 24 மணித்தியாலங்களுக்கு முன்னர் பொது மக்களின் பார்வைக்காக சபையால் ஒதுக்கப்பட்ட இடத்தில் கட்டப்பட்டு உரிய அதிகாரிகள் முன்னிலையிலேயே கொல்களத்தில் அறுக்கப்பட வேண்டும்.

17. சந்தை வளவின் உட்புறமாக உள்ள கடைகளுக்கு சந்தைக் குத்தகையாளர் எந்த விதமான வரியும் அறவிடக் கூடாது.

18. கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள் புதுக்குடியிருப்பு பிரதேசசபையில் எவ்வித நிலுவைக் கட்டணங்களையும் முன்னைய காலங்களில், நடப்பு ஆண்டில் செலுத்தத் தவறியவர்களாக அல்லது கறுப்பு நிரல் பட்டியலில் சேர்க்கப்பட்டவர்களாக இருந்தால் கேள்வியில் சித்தி பெற்றாலும் அவர்களுக்கு வழங்கப்படமாட்டாது.

19. கொல்களத்தில் அறுக்கப்படும் ஆண், பெண் மாடுகள், எருமை மாடுகள், ஆடுகள் கிராம சேவகரினால் உறுதிப்படுத்தப்பட்ட உரிமையாளரின் கடிதத்துடனேயே கொல்களத்திற்கு வெட்டுவதற்கு கொண்டுவர முடியும். அதற்கு மேலதிகமாக பெண் மாடுகள், ஆடுகளுக்கு மாத்திரம் இனப்பெருக்கத்திற்கு தகுதியற்றது என பிரதேச கால்நடை வைத்தியரினால் வழங்கப்பட்ட சான்றிதழும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

20. சந்தைகள் நடைபெறும் இடங்கள் தேவை ஏற்படின் மாற்றப்படும், பொது விதிகள் தவிர்ந்த விஷேச சலுகைகள் சபை தீர்மானத்திற்கு அமைவாகவே நடைமுறைப்படுத்தப்படும், தாங்கள் சட்டவரையறைகளுக்கும் சபைக்கும் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும்.

21. அரசினால், பிரதேச சபையினால் தொற்று நோய்கள் சம்பந்தமாக அறிவுறுத்தப்படும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடத்தல் வேண்டும்.

22. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் நேரடியாக அல்லது தொலைபேசி மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**அ.தவகுமாரன்,**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**புதுக்குடியிருப்பு பிரதேசசபை,**
**புதுக்குடியிருப்பு.**
**2022.10.15.**
**தொலைபேசி இல:-0212290847**
**0212291023**
**email-pkipsmullai@gmail.com.**


(CS 38281) (3/6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 . 09 . 1927

உதிர்வு 12 . 10 . 2006



### அமரர் இராசரத்தினம் இரத்தினவேல் (J.P)

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், கச்சேரி, யாழ்ப்பாணம்)

திதி: அபரபக்க சஷ்டி

அன்புமொழி பேசி ஆயிரம் கதைகள் சொன்னீர்
ஆலமரமாகி அனைவருக்கும் நிழல் தந்தீர்
பண்பு என்ற சொல்லின் பாலம் நீங்கள்
கடமை மறவாத காரிய வீரர் ஐயா !
ஆண்டுகள் பல கடந்தாலும் நீங்காது உங்கள் நினைவுகள்

குடும்பத்தினர்

(cs 46994)(2/6)

## UNIVERSITY OF JAFFNA
## INVITATION FOR BIDS
### Provision of Cleaning, Janitorial and Maintenance Services for University of Jaffna - JAFFNA & KILINOCHCHI 2023/2024

1. The Chairman, Procurement Committee, University of Jaffna invites sealed bids for the above contract up to 2.00 p.m. on 07th of November 2022.
2. Period of contract should be 365/366 days (in a leap year) subject to a performance evaluation period of 60 days.
3. Any firm which satisfies the following conditions is eligible to submit bids. Documentary evidences should be provided with bids.
   - 3.1 Firm must be registered in Sri Lanka under the Company's Acts or Business Name Registration Ordinance.
   - 3.2 Average annual volume of cleaning service contracts performed in the last 3 years by the firm should be at least Rs. 25 Million
   - 3.3 Firm must have satisfactorily carried out at least one cleaning service contract to a Government Department/ Corporation/ University during the last 3 years for not less than Rs. 10.0Million.
   - 3.4 Availability of trained and experienced Sri Lankan staff during the last 3 years for the firm should be at least 75.
4. Interested bidders may obtain further information from Deputy Registrar, Administration Branch, University of Jaffna, and inspect the bidding documents at the same address on any working day during working hours. **Contact numbers: - Tele: 021 2226517, Fax:- 021 2226517.**
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to Deputy Registrar, Administration Branch, University of Jaffna, until 01st of November 2022 from 09:00hrs to 15:00hrs upon payment of a non-refundable fee of Rs.3500/- at the Shroff Counter of the university. All bids shall be accompanied by a bid security amount of 1% of the bid price of Jaffna (410000) & Kilinochchi (250,000) to be valid for a period of 120 days, (should be as 07th of March 2023) from the date of closing of bids. The bid security should be obtained from any commercial bank operating in Sri Lanka approved by the Central Bank of Sri Lanka in favour of Vice Chancellor, University of Jaffna.
6. Bidders are strongly advised to attend the pre-bid meeting on 28th of October 2022 at 10.00 am in the board room of the University of Jaffna, Thirunelvely for the contract and visit each location (Jaffna) before pricing.
7. Bids shall be delivered or sent by registered post to the Deputy Registrar, Administration Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna P.O Box 57, to reach before 14.00 hrs, 07th of November 2022or be deposited in the tender box kept in the Office of the Registrar before the above date and time. Bids will be opened soon after closing the bids in the presence of the bidders' representatives who choose to attend.
8. Bids shall be valid for a period of 91 days from the date fixed for closing of bids or any extended period.

Chairman,
Procurement Committee
University of Jaffna.

(CR 38272) (3/6)


## யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்
# தீபாவளி
## ஜவுளிக் கொண்டாட்டம்

ஆண்கள் மற்றும் பெண்களுக்கான
தலைசிறந்த ஆடைகள்
திருமணப் பட்டுச்சாறிகள்,
கொட்டன் சாறிகள்,
Tops, Party Frocks,
சல்வார்கள்,
சல்வார் துணிகள்,
சேட், T.சேட், சிறுவர்,
சிறுமியருக்கான
ஆடைத் தெரிவுகள்



# இந்தியன் செலக்ஷன்

இது பிரமாண்ட ஜவுளித் துறையின்
சாம்ராஜ்யம்


காலம் : 01.10.2022 முதல் 25.10.2022 வரை
இடம் : வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம்.

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 02 - 01 - 1946

மறைவு 26 - 09 - 2021



### அமரர் பரமு சண்முகநாதன்

திதி : சஷ்டி

நாட்கள் பல கடந்தாலும்
நினைவுகள் கலைந்திடுமோ!
ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறிடுமோ? எம் துயரம் ஐயா!
நீங்காத நினைவலையாய்
நெஞ்சமதில் நிழலாடும் ஐயா!
என்றும் இறையடியில் அமைதிபெற
வேண்டுகின்றோம்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

பிள்ளைகள்

(CR 38279) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் நிலையங்களில் மாதிரிப் பரிசோதனை ஆரம்பம்



கொழும்பு, ஒக். 15

**அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் 60 எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மாதிரிப் பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவிக்கையில்;

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இடம்பெறும் முறைகேடுகள் தொடர்பில் இதுவரை 200 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு, நுகர்வோர் விவகார அதிகார சபை மற்றும் நிறை மற்றும் அளவீடுகள் திணைக்களம் ஆகியவற்றின் கூட்டுப் பரிசோதனையைத் தொடர்ந்து, வெல்லவாயவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அண்மையில் சீல் வைக்கப்பட்டது.

அத்துடன் சில எரிபொருள் நிலையங்களில் 95 ஒக்ரேன் பெற்றோலுக்கான விலையை வாடிக்கையாளர்களிடம் கோரும்போதும் 92 ஒக்ரேன் பெற்றோலை விநியோகிப்பதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இடம்பெறும் முறைகேடுகளைக் களைவது தொடர்பான கலந்துரையாடலுக்கு அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் அதற்கு சாதகமான பதிலை வழங்கவில்லை.

இந்த நிலையில் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் 60 எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மாதிரிப் பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது- என்றார். (ச-இ)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 . 06 . 1945



மறைவு 27 . 09 . 2021

அமரர் திரு. சிவகுரு அரியரத்தினம்

(சாவகச்சேரி பிரபல வெற்றிலை கடை அரியம்)

திதி: புரட்டாதித்திங்கள் தேய்பிறை ஷஷ்டி

எம் வாழ்வின் இன்பமே ! எதிர்பார்த்த தந்தையே!
அதிகாலை வேளையிலே அமைதியான பொழுதினிலே
ஆண்டவனிடம் சென்று ஆண்டொன்று ஆனதுவோ!
ஐம்பது ஆண்டுகளே அம்மாவுடன் வாழ்ந்தது போதுமோவென
ஐங்கரன் தாழ் சேர்ந்தீர்களோ!
அன்பிற்கோர் இருப்பிடமாய் பண்பிற்கோர் இலக்கணமாய்
எந்நாளும் எம் உயர்வுக்காய் இறுதிவரை உழைத்தீரே!
ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவதில்லை மாநிலத்தில் - எம் தந்தையே!
நீங்கள் மறைந்தாலும் என்றும் எம் இதயத்தில்
நீங்காது நினைவில் நிறைந்திருக்கும் இந்நாளிலே
சிரம்தாழ்த்தி வணங்குகின்றோம்.

ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனைப் பிரார்த்திக்கும்

கற்குளி வடக்கு,
கல்வயல், சாவகச்சேரி.

குடும்பத்தினர்
077 669 1290

(cr. 38266) (2.6)


## தே. அ. அட்டைக்கான கட்டணங்கள் அதிகரிப்பு

புதிய வர்த்தமானி வெளியீடு



கொழும்பு, ஒக். 15

தேசிய அடையாள அட்டை பெறுவதற்காக அறவிடப்படும் கட்டணம் அதிகரிக்கப்பட்டு புதிய வர்த்தமானி அறிவித்தல் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸால் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் இந்தக் கட்டண அதிகரிப்பு நடைமுறைக்குவரும் என ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதற்கமைய புதிதாக தேசிய அடையாள அட்டையை பெற்றுக் கொள்வதற்காக அறவிடப்படும் 100 ரூபா கட்டணம் 200 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. தேசிய அடையாள அட்டையில் திருத்தங்களை மேற்கொண்டு புதிதாக தேசிய அடையாள அட்டையை பெற்றுக் கொள்வதற்காக இதுவரை அறவிடப்பட்ட 250 ரூபா கட்டணம் 500 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும், காணாமற்போன தேசிய அடையாள அட்டையை மீளப் பெற்றுக் கொள்வதற்காக அறவிடப்படும் கட்டணம் 500 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# சுங்கத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒரு மில். அரிசி விடுக்க நடவடிக்கை

நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 15

பல்வேறு காரணிகளால் சுங்கத்திணைக்களத்தால் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கொள்கலன்களிலுள்ள ஒரு மில்லியன் கிலோ அரிசியை விடுக்கநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய கொழும்பு துறைமுகத்திலுள்ள சுங்கத்தில் கண்காணிப்பை அண்மையில் முன்னெடுத்திருந்த நிலையில் அதுகுறித்த விடயங்கள் தொடர்பில் துறைமுகம் மற்றும் சுங்கப்பிரிவின் அதிகாரிகளுடன் விசேட கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போதே குறித்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தாமதக் கட்டணம் செலுத்தப்படாமை காரணமாக 79 கொள்கலன்களில் ஒரு மில்லியன் கிலோ அரிசி தேங்கியுள்ளது.

இதேவேளை, கொழும்பு துறைமுகத்தின் நெரிசலைக் குறைக்கும் வகையில் தற்போது சுங்கத் திணைக்களத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 950 க்கும் அதிகமான கொள்கலன்களைத் தாமதக் கட்டணமின்றி விடுவிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொள்கலன்களில் அரிசிக்கு மேலதிகமாக மஞ்சள் உள்ளிட்ட பல பொருள்களும் உள்ளன.

அதற்கமைய முன்னுரிமைப் பட்டியலின் அடிப்படையில் கொள்கலன்கள் விடுவிக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது - என்றார்.

இதன்போது குறித்த கொள்கலன்களுக்கு தாமதக் கட்டணத்தில் இருந்து விலக்கு அளிக்கும் படியான அமைச்சரவைப் பத்திரம் விரைவில் அமைச்சரவையில் முன்வைக்கப்படும் என அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்தார். (ச-இ)

## யாழ்.மாவட்டச் செயலகத்தில் சிறுவர், முதியோர் தின விழா

யாழ்ப்பாணம், ஒக்.15

யாழ்ப்பாண மாவட்டச் செயலகம், மாவட்ட சிரேஷ்ட பிரஜைகள் பேரவை ஆகியவற்றின் ஏற்பாட்டில் சிறுவர் மற்றும் முதியோர் தின விழா, யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் கடந்த புதன் கிழமை இடம்பெற்றது.

விழாவில் சிறுவர்களின் கலை நிகழ்வுகளைத் தொடர்ந்து வெவ்வேறு பிரதேசசெயலகப் பிரிவுகளில் இருந்து கலந்துகொண்ட சிறுவர்களுக்கும் முதியோர்களுக்கும் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்பட்டன.

மேலதிக மாவட்டச்செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெற்ற விழாவில் மாவட்டச்செயலர் க. மகேசனும் கலந்துகொண்டார். (ஒ-14,9)



## மசகு எண்ணெய் விலை வீழ்ச்சி

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை மேலும் வீழ்ச்சியை பதிவுசெய்துள்ளது. இதன்படி டபிள்யூ.ரி. ஐ. மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 88.71 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

அத்துடன், பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 93.82 அமெரிக்க டொலராக வீழ்ச்சியடைந்துள்ளது. (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீபாவளியை முன்னிட்டு ஞாயிறுகளில் வர்த்தகம்

யாழ்ப்பாணம், ஒக். 15
தீபாவளிப் பண்டிகைளை முன்னிட்டு பொதுமக்களின் நலன்கருதி ஞாயிறுக்கிழமைகளிலும் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட வர்த்தகர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது யாழ்ப்பாணம் வணிகர் கழகம். இதன்படி எதிர்வரும் 16ஆம் திகதி மற்றும் 23ஆம் திகதி ஞாயிறுக்கிழமைகளில் வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம)

## நெஞ்சு வலி ஏற்பட்டு தமிழக கலைஞர் சாவு

சாவகச்சேரி, ஒக். 15
கோயில் சிற்ப வேலைகளுக்கு வந்திருந்த தமிழக சிற்பக் கலைஞர் நெஞ்சு வலி ஏற்பட்டு உயிரிழந்துள்ளார். இந்தச்சம்பவம் சங்கத்தானை முருகமூர்த்தி கோயிலில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

தனுசு திருமுருகன் (வயது-46) என்ற கலைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார். இவர் சங்கத்தானை முருகமூர்த்தி கோயில் புனரமைப்புப் பணி களுக்கு சிற்ப வேலைகள் மேற்கொள்ள கடந்த 9 மாதத்துக்கு முன்னர் அழைத்து வரப்பட்டார்.

கோயிலின் சிற்ப வேலைகள் முடிந்த பின்னர் அடுத்தவாரம் தமிழகம் செல்வதற்கான ஆயத்தங்கள் மேற்கொண்ட வேளையில் நெஞ்சு வலி ஏற்பட்டு யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

எனினும், அவர் சிகிச்சை பயனின்றி கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார். உயிரிழந்த கலைஞரின் சடலம் ஆலய நிர்வாகத்தால் தமிழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. (ஒ-14.9)





### பாராட்டி வாழ்த்துதல்

ஊரெழு சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலையில் தொடர்ந்து 07 ஆண்டுகள் சமய ஆசிரியராக சேவையாற்றும்

**செல்வி மகேந்திரன் சனுதியா**

அவர்களுக்கு 07.09.2022 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் "இளம் கலை பட்டம் சிறப்புக் கலை அரசியல் விஞ்ஞானம்" பட்டம் பெற்றமையை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: அதிபர், பாடசாலை சமூகம்,
சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலை ஊரெழு,

### காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்

நடத்தும்

**பரிசளிப்பும் கலைநிகழ்வும் அழைப்பு**

இடம் : நல்லூர் துர்க்கா மணிமண்டபம்
காலம் : 16.10.2022 ஞாயிற்றுக்கிழமை
பி.ப 2.00 மணி

கலாமன்ற மாணவர்களின் நிகழ்ச்சி
ஈழத்து இளம் நடனக் கலைஞர்கள் வழங்கும்
"நாட்டியாஞ்சலி"





சிறப்பு பட்டிமண்டபம்
தலைப்பு
"கருவறையிலிருந்து கல்லறை வரை மனித வாழ்வில் விஞ்சி நிற்பது"
பணமே! பாசமே!
நடுவர்
சிதம்பரஜோதி, தமிழருவி காரை.த. சிவகுமாரன்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
கிழவன்காடு கலாமன்றம்
காரைநகர்-யாழ். கிளை

### அகவொளி: உள ஆற்றுப்படுத்தல் நிறுவனம், சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம். உள ஆற்றுப்படுத்தல் டிப்ளோமா பயிற்சிநெறிக்கான (2022-2023) விண்ணப்பங்கள் கோரல்

**தகைமை:**
அதிகுறைந்த தகைமையாக க.பொ.த. (உயர்தரம்) 3 பாடங்களில் சித்தி அல்லது அதற்குச் சமமான மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழு வழங்கிய சான்றிதழ் (NVQ – 4).

**சான்றிதழ் வழங்கும் பல்கலைக்கழகம்:**
அயர்லாந்து தேசிய பல்கலைக்கழகம். கொல்வே.

**கற்கைநெறியின் தனித்துவங்கள்:**
(1). உளவியல் துறையில் தகைமை (M.Sc., M.Phil., B.A.) வாய்ந்த வளவாளர் குழாமினால் நெறிப்படுத்தப் படுகின்றது. (2) செயல்முறைப் பயிற்சிகளையும் உள ஆற்றுப்படுத்தல் சார்ந்த ஆய்வினையும் கொண்டுள்ளது. (3) பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்தோர் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் உள ஆற்றுப்படுத்துநர்களாகப் (Psychological Counsellors) பணியாற்றி வருகின்றனர்.

- கற்கைநெறி மொழி : தமிழ்
- காலம் : ஒரு வருடம்
- நாட்கள் : சனி, ஞாயிறு
- நேரம் : 09.00 - 02.15
- தொடங்கும் காலம் : நவம்பர் 2022 நீடிக்கப்பட்ட இறுதி விண்ணப்பத் திகதி: 27-10-2022

விண்ணப்பப்படிவம் (ரூபா 100): நேரடியாகப் பெற்றுக்கொள்வதற்கு. அகவொளி: உள ஆற்றுப்படுத்தல் நிறுவனம். சென் பற்றிக்ஸ் வீதி. யாழ்ப்பாணம். ஏனையோர் கற்கைநெறி ஒருங்கிணைப்பாளரைத் தொடர்பு கொள்ளவும்.

**மேலதிக விபரங்களுக்கு:**
- கற்கைநெறி ஒருங்கிணைப்பாளர் - 76 937 8476
- இயக்குநர் - 77 476 6891
- பணியகம் - 021 222 2856

அருள்திரு இராசேந்திரம் ஸ்ரலின்
(M.Sc.Guidance & Counselling, Manila)
இயக்குநர். (cs.47107) (2.6)

### வீடு வாடகைக்கு

கொழும்புத்துறை பிரதான வீதியில்
3 படுக்கையறை. 2 குளியலறை. 1 சமையலறை. 2 Hall உடன் புதிய வீடு வாடகைக்குண்டு.
**076 841 5357**

### விதைநெல் . தென்னம் பிள்ளைகள் விற்பனைக்கு

இயந்திரம் மூலம் சுத்திகரிக்கப்பட்டு முளைத்திறன் பரிசீலிக்கப்பட்ட அதிகூடிய விளைச்சலைக் கொண்ட BG 406. மற்றும் BG 34.6 இன மூன்றரை மாத விதைநெல் மற்றும் நல்ல இன தென்னம்பிள்ளைகள் விற்பனைக்குண்டு. **077 659 2044**
(CR 38280)(3/6)


## மரண அறிவித்தல்



### அமரர் இராமலிங்கம் தங்கம்மா

சரசாலையைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் தங்கம்மா நேற்று (14.10.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் தங்கமுத்து தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற நாகம்மாவின் சகோதரியும், காலஞ்சென்ற செல்லப்பா தங்கமுத்து தம்பதியரின் மருமகளும், இராஜேஸ்வரி (பிரான்ஸ்), சிவராசா (முன்னாள் பேக்கரி உரிமையாளர்), அற்புதராணி (மட்டுவில்), இந்திராணி (அல்லாறை), ஜெயராணி (பூநகரி), பவளராணி (இத்தாலி), மோகனராணி (ஓய்வுபெற்ற உப அதிபர் யா/சந்திரமௌலீச வித்தியாலயம்), கலைவாணி (ஆசிரியர் யா/ சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தி.) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற செல்வரத்தினம், காலஞ்சென்ற இரவீந்திரா மற்றும் புஸ்பராணி, கிருஷ்ணமூர்த்தி, விக்கினேஸ்வரன், சற்குணலிங்கம், பாலச்சந்திரன், காலஞ்சென்ற அருட்செல்வன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், இராஜராணி சுதாகரன் (பிரான்ஸ்), திருச்செந்தூர் செல்வன் பத்மலோஜினி (லண்டன்), திருவருட்செல்வன் சாதனா (இத்தாலி), ஜெயரூபன் திருமகள் (லண்டன்), பிரகலாதன் பிலோமினி (லண்டன்), மோகன்ராஜ், நளினி (லண்டன்), லோச்சந்தர் அனுஷா (கொழும்பு), ஜெயகரன் சரண்யா (இத்தாலி), வருணன் (சுவிஸ்), காலஞ்சென்ற கோகுலன், கார்த்தியன், ரகுவரன், சாருஜா, அனந்தன் ஜனார்த்தனி, மனோகரன் அகலினி, பவீந்தினி, சியாமினி, பிருதுவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.10.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஸ்ரீ வேற்பிள்ளை
வாசிகசாலை ஒழுங்கை,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்
தொடர்பு:- 075 048 2865
(CR 38285)(1/6)

## மரண அறிவித்தல்

தோற்றம்
21 . 05 . 1987



மறைவு
14 . 10 . 2022

### அன்னலிங்கம் கிரிஷாத் (மிராஜ்)

சிவன் வீதி, பரவைக்குளம் திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அன்னலிங்கம் கிரிஷாத் (மிராஜ்) நேற்று (14.10.2022) வெள்ளிக்கிழமை அகால மரணம் அடைந்தார்.

அன்னார் அமரர் சின்னத்தம்பி செல்லம்மா, அமரர் இராமசாமி பொன்னம்மா ஆகியோரின் பேரனும், அன்னலிங்கம் விஜயகுமாரி தம்பதியரின் அன்பு மகனும், பிரசாத்தின் பாசமிகு தம்பியும், சிந்துஜாவின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்
தொடர்பு:- 077 974 1542
(CS 21241) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் எதிர்காலம் தொடர்பில் வடக்கு மக்களுடனும் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஒக். 15

சமூக நீதிக்கான தேசிய இயக்கம் மற்றும் இன மற்றும் மத நல்லிணக்கத்துக்கான கூட்டமைப்பு என்பன, நாட்டின் சுபீட்சமான எதிர்காலம் தொடர்பில் வடக்கு மக்களுடன் இன்றையதினம் கலந்துரையாடலை மேற்கொள்ளவுள்ளன.

முன்னாள் சபாநாயகரும், சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவருமான கருஜயசூரிய தலைமையில் நோத்கேற் ஜெற்விங் தனியார் விடுதியில் இன்று காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. (அ-ம-125)

## தப்பமுடியாத...

இது தொடர்பில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான இயக்குநர் அலெக்சாண்டர் மத்தியூ தெரிவித்ததாவது:-

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இலங்கை குறித்த அறிக்கைகள், வறுமை நிலையிலுள்ள மக்கள் எவ்வாறு விரக்தி நிலைக்குச் செல்கின்றனர் என்பதை வெளிப்படுத்துவதாகவே அமைந்துள்ளன. இலங்கையில் வறுமைக்கோட்டின் கீழ் வசிக்கும் மக்கள் பெருமளவு கடன்வாங்குதல், குறைந்த எவு உணவை உண்ணுதல், நாளாந்த உணவைக் குறைத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு, வாழ்வதற்கான போராட்டத்தை நடத்திவரும் நிலையில், இந்தப் போராட்டங்கள் மூலம் அவர்கள் மிகக் குறைந்த பயனையே அனுபவிக்கின்றனர். இலங்கையில், மிகமோசமான நிலையில் உள்ள மனிதாபிமான தேவைகளைப் பூர்த்தி செய்வதே முன்னுரிமைக்குரிய விடயம். இதனை திறமையாகவும் விரைவாகவும் செய்யாவிட்டால் இப்போது நெருக்கடியான நிலையிலுள்ள மக்கள் தப்பமுடியாத அவலநிலைக்குச் செல்வார்கள் - என்றார். (அ-ம)

## புலிகளின்...

நேற்று மேற்கொள்ளப்பட்ட நிலையில், ஆயுதங்கள் எவையும் மீட்கப்படாததை அடுத்து தேடுதல் கைவிடப்பட்டது.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த தேடுதல் நடவடிக்கை நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது. பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும் இணைந்து இந்தத் தேடுதலில் ஈடுபட்டனர். எனினும், ஆயுதங்கள் எவையும் மீட்கப்படாததை அடுத்து தேடுதல் கைவிடப்பட்டது. (அ-ம-27)

## மின்தடை...

விஜேசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் தொடர்ச்சியாக மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறுகின்றது. இதனால் அனைத்து நீர்மின் உற்பத்தி நிலையங்களுடன் தொடர்புடைய நீர்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. இதன்காரணமாக மின்சார உற்பத்தியும் அதிகரித்துள்ளது. எனவே வார இறுதி நாள்களில் மின்விநியோகத் தடைக்கான நேரத்தைக் குறைக்கமுடியும் - என்றார். (அ-ம)

## இந்தியாவுடன்...

சந்ததியினருக்காக ஆரம்பிக்கப்பட்ட திட்டம் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். திருகோணமலை மாவட்ட அபிவிருத்தித் திட்டத்தில் சில அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்கு இந்தியாவுடன் இணைந்து செயற்பட வேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

திருகோணமலை மாவட்ட அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் திருகோணமலையில் நேற்று நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவுக்கு எண்ணெய்த் தாங்கிகளை வழங்க முற்பட்டபோது எதிர்ப்புகள் முன்வைக்கப்பட்டன. அன்று எண்ணெய்த் தாங்கிகளை வழங்கியிருந்தால், இன்று நாடு எரிபொருள் நெருக்கடியை எதிர்நோக்கியிருக்காது. திருகோணமலையில் விமான நிலையம் இருந்தாலும் அங்கே பெரிய விமானங்களை தரையிறக்க முடியாது. எனவே, ஹிங்குரக்கொட அல்லது வவுனியாவை சர்வதேச விமான நிலையத் தளமாக உருவாக்குவதற்கான நிலைமை ஏற்படும். திருகோணமலை முதல் மட்டக்களப்பு வரையிலான சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்பும் உள்ளது.

கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்காக நாம் முழுமையான திட்டத்தை உருவாக்கவேண்டும். அதேபோன்று வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டமும் உள்ளது.

வடக்குக்கும் கிழக்குக்கும் இடையில் திருகோணமலை அமைந்துள்ளது. அதேபோன்று வடமத்திய மாகாணத்தை எடுத்துக்கொண்டால் அநுராதபுரம் மற்றும் பொலநறுவையின் பெரும் பகுதி இந்தப் பிரதேசத்துக்கே சொந்தமாகின்றது. இந்தக் கூட்டு வேலைத்திட்டத்தை 5 வருடங்களில் செய்யமுடியாது. இதனை 20 - 25 வருடங்களில் செய்யலாம். மகாவலி அபிவிருத்தித் திட்டத்தை நிறைவேற்ற 10 வருடங்கள் தேவைப்பட்டன. எனவே, இதன் பணிகள் குறித்து கலந்தாலோசித்த பின்னர் அமைச்சரவையின் தீர்மானத்துடன் இந்தச் செயற்றிட்டத்தை தொடர்ந்து நடைமுறைப்படுத்தவுள்ளோம்' - என்றார். (அ-ம-22)

## இன, மத...

விக்கிரமசிங்க தெரிவித்தார். அனைத்துத் தரப்பினரும் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திருகோணமலைக்கு நேற்று பயணமொன்றை மேற்கொண்டார். இதன்போது திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்களையும் அவர் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஊடகவியலாளர்களுடனான கலந்துரையாடலின்போது அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதியிடம் எடுத்துரைக்கப்பட்டது. ஊடகவியலாளர்கள் காணி மற்றும் வீட்டு வசதிகள் அற்று வாழ்கின்றனர் என்றும் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. ஊடகவியலாளர்களின் சகல விடயங்களையும் கேட்டறிந்த ஜனாதிபதி, இந்த விடயம் தொடர்பாகக் குழுவொன்றை நியமித்து உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக வாக்குறுதியளித்தார். இதனைத் தொடர்ந்து திருகோணமலை கடற்கரையையும் ஜனாதிபதி பார்வையிட்டார். (அ-ம-22)

## போதை...

ஹெரோய்ன், ஐஸ் மற்றும் போதை மாத்திரைகள் என்பவற்றை விற்பனை செய்த ஐந்து பேர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கோப்பாய் - செல்வபுரம் பகுதியில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரிடம் இருந்து 4 கிராம் 200 மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. ஊரெழு முருகன் கோவிலடியில் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவரிடம் இருந்து 2 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோய்ன், மற்றொருவரிடம் இருந்து 96 போதை மாத்திரைகள், ஏனைய இருவரிடம் இருந்தும் 15 மில்லிகிராம் ஐஸ் போதை என்பன மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. விசாரணைகளின் பின்னர் ஐவரும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர். (அ-ம-20-26-125)

## வடமாகாணத்தில்...

நா.பிரதீபராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்றுத் தெரிவித்ததாவது:-

நேற்று வெள்ளிக்கிழமை முதல் நாளை மறுதினம் ஞாயிறு வரை வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் கனமழை பெய்யும் வாய்ப்புள்ளது. அதே சமயம் எதிர்வரும் நாள்களில் வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது. எனவே வடக்கு மாகாண விவசாயிகள் அடுத்துவரும் சில தினங்கள் கழித்து தங்களது பெரும்போக விதைப்புச் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும் - என்றார். (அ-ம)

## நாவாந்துறையில்...

பட்டா ரக வாகனமும் நேருக்குநேர் மோதியதிலேயே மேற்படி விபத்துச் சம்பவித்துள்ளது. பட்டா ரக வாகனத்தைச் செலுத்திய சாரதி தப்பியோடிய நிலையில், விபத்து தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-125-26)

## வீடுகள்...

பேர் காங்கேசன்துறை குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 10 பவுண் நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

வல்வெட்டித்துறை பகுதியில் அண்மைக்காலமாக திருட்டுகள் அதிகரித்து வருகின்றன என்றும் அண்மையில் வீடுகள் உடைத்துத் திருடப்பட்டுள்ளன என்றும் பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து மேற்கொண்ட நடவடிக்கையிலேயே மேற்படி நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் ஒருவர் கம்பர்மலையைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞர். அவர் உயிர்கொல்லி போதைப் பொருளான ஹெரோய்னுக்கு அடிமையானவர். மற்றொருவர் துன்னாலையைச் சேர்ந்த 30 வயதுடையவர். கைதான மற்றையவர் 50 வயதுடைய பெண். அவர் கம்பர்மலையில் உள்ள வீடொன்றில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த 10 பவுண் நகைகள் மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ-ம-125)

## குடும்பத்தலைவர்...

யளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டின் பின்புறக் கதவை அலவாங்கால் உடைத்து கொள்ளையர்கள் உள்நுழைந்துள்ளனர். சத்தம் கேட்டு உஷாரடைந்த குடும்பத்தலைவர் கொள்ளையர்களைத் தடுக்க முற்பட்டபோதே அவர் மீது கத்தியால் வெட்டிவிட்டுத் தப்பியோடியுள்ளனர். படுகாயங்களுக்கு உள்ளான குடும்பத்தலைவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். வல்வெட்டித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-26)

## சடுதியாக...

கடந்த காலங்களில் ஒரு கிலோகிராம் கோதுமை மா 350 ரூபா முதல் 400 ரூபா வரையில் விற்பனையானது. எனினும், தற்போது ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் மொத்த விலை 290 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி, 25 கிலோகிராம் நிறையுடைய கோதுமை மா மூடை ஒன்றின் விலை 7 ஆயிரத்து 250 ரூபாவாகும். கோதுமை மா இறக்குமதி செய்யப்பட்டதன் காரணமாகவே இந்த விலைக்குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது - என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-ம)

## நவாலி...

குட்படுத்தியிருந்தார். அதன்போது சந்தேகத்துக்கிடமான பொருள்கள் காணப்படுவதை அவதானித்து மானிப்பாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார். தகவலையடுத்து காணிப்பகுதிக்கு விரைந்த மானிப்பாய் பொலிஸார் சந்தேகத்துக்கிடமான பொருள்கள், கைக்குண்டுகள் என அடையாளங்கண்டனர். இந்த நிலையில் நீதிமன்றத்தின் அனுமதி பெற்று யாழ்.மாவட்ட பொலிஸ் விசேட அதிரடிப்படையால் நேற்று வெள்ளிக்கிழமை காலை 6 மணிமுதல் மேற்கொள்ளப்பட்ட மீட்பு நடவடிக்கைகளின்போது 111 கைக்குண்டுகள் மீட்கப்பட்டன என்று யாழ்.பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்தது. (ஓ-14-125)

## ஞானசாரதேரருக்கு...

முஸ்லிம் மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் வகையில் கருத்துத் தெரிவித்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் ஞானசாரதேரருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கின் விசாரணைக்காக நீதிமன்றத்துக்குச் சமுகமளிக்காததை அடுத்தே அவருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதே ஞானசாரதேரர் நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்துக்காக முன்னர் சிறையிடப்பட்டிருந்தார். எனினும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பொதுமன்னிப்பின் பேரில் அவர் சிறையில் இருந்து வெளியில் வந்தாரென்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பான வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியான செய்தி

**கொழும்பு விலையில் யாழ். நகரில்**

உங்களுக்குத் தேவையான அனைத்து வகையான பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**சில வருடகாலமாக இயங்கிவரும் ஸ்தாபனத்தில் இன்று முதல் விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.**

- பான்ஸிப் பொருட்கள்
- பை (Bag) வகைகள்
- மாபிள் வகைகள்
- பாதணி வகைகள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- விளையாட்டுப் பொருட்கள்
- குடை, மழைக்கவசங்கள்
- தையல் உபகரணங்கள்
- பாடசாலை பொருட்கள்
- கவரிங் பொருட்கள்
- அழகுசாதனப் பொருட்கள்
- சில்வர் பொருட்கள்
- கிளாஸ் வகைகள்
- பிளாஸ்ரிக் பொருட்கள்
- முகக் கவசங்கள் (Mask)
- மணிக்கூடுகள்

மொத்தக் கொள்வனவிற்கு 10% கழிவு

**சரவணபவன் பான்ஸி ஹவுஸ்**
**26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன்**
**(செம்மா தெரு ஒழுங்கை) யாழ்ப்பாணம்.**

உரிமையாளர்:- தே.கலைத்தாசன் (கரன்)
021 315 5900, 077 468 3354



# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 05 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- **பார்வையிடும் நேரம்**

காலை 6 மணிமுதல் மாலை 6 மணி வரை
**தரகர் தேவையில்லை.**

தொடர்பு:- ஜெயம்

077 8147 389
077 9865 457


# காசோலைகள் நிராகரிப்பு; நாட்டுக்கு நெருக்கடி

கொழும்பு, ஒக். 15

வங்கிகளில் பணமின்மை காரணமாக நாட்டில் இந்த ஆண்டின் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் மாத்திரம் சுமார் 60 பில்லியன் ரூபா பெறுமதியான காசோலைகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இந்தாண்டுக்கான இரண்டாம் காலாண்டுப் பகுதிகளில் சுமார் 2 லட்சத்து 50 ஆயிரம் காசோலைகள் பவுன்ஸ் ஆகியுள்ளன. இந்த காசோலைகளின் மொத்தப் பெறுமதி 59.6 பில்லியன் ரூபா எனத் தெரிவிக்கப்படுகின்றது.

முதலாம் காலாண்டில் சுமார் ஒரு லட்சம் 92 ஆயிரத்து 300 காசோலைகள் நிராகரிக்கப்பட்டன.

காசோலை நிராகரிப்பு சந்தர்ப்பங்கள் முதலாம் காலண்டில் 2.1 வீதமாகக் காணப்பட்டதாகவும் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் இது 3.2 வீதமாக உயர்வடைந்துள்ளது என அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

மிகப்பெரியளவிலான காசோலைகள் நிராகரிக்கப்பட்டதால் அநேகமான வியாபாரங்கள் பெரும் நெருக்கடி நிலைமையை எதிர்நோக்கியுள்ளன.

இது நாட்டுக்குப் பெரும் பிரச்சினையாகும். (ச-இ)


## கார் விற்பனைக்கு

Alto (K10), Automatic, 2015 model
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 240 2093



## விற்பனை உதவியாளர் தேவை [பெண்கள்]

நல்லூரில் உள்ள குழந்தைகளுக்கான விற்பனை நிலையம் ஒன்றிற்கு விற்பனை உதவியாளர் பெண்கள் வேலைக்குத் தேவை.

**Note :-** யாழ்.மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் மற்றும் கணினி அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

076 166 1986



## வீடு வாடகைக்கு

இல.53, ராணி வீதி, நல்லூரில் சகல வசதிகளுடன் கூடிய வீடு அரச உத்தியோகத்தர்களுக்கு வாடகைக்கு விடப்படும்.

075 973 0252



## வேலை வாய்ப்பு

Show Room ஒன்றிற்கு வேலை ஆட்கள் தேவை.
ஆண்/பெண் இருபாலாரும்.
வயது எல்லை 20 - 30 வரை

**EXPONET**
347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
071 4150 995



## ஆங்கில வகுப்புக்கள்

தரம் 1 - தரம் 5 மாணவர்களுக்கு ஆங்கில மொழி மூலமான வகுப்புக்கள் (English Medium) நடைபெறுகின்றது.

மேலும் தரம் 1- தரம் 11 வரையான மாணவர்களுக்கு ஆங்கில வகுப்புக்கள் (English Classes) நடைபெறுகின்றது.

பொன்னையா வீதி, ஆனைக்கோட்டை.
தொடர்பு:- 074 366 4544





அமெரிக்க லொத்தர் இலவச விசா

ஏமாற்றங்களை தவிர்க்க
**உடனே பதியுங்கள்**

Passport அவசியமில்லை

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்

வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரிய சந்தர்ப்பம்

**V2 Travels**

இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்காவில் குடும்பத்துடன் வசிக்கின்றார்கள்

0768226244


## கிளி.தெற்கு வலய தமிழ்விழா இன்று

கிளிநொச்சி, ஒக். 15

கிளிநொச்சி தெற்கு வலயக் கல்வி அலுவலகத்தின் தமிழ் விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு புனிததிரேசா மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

வலயக்கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் கி.விசாகரூபன் கலந்துகொள்ளவுள்ளார். (ஓ-14,159)


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் தாவடி சந்திக்கு அருகாமையில்**
**09 பரப்பு (நிலபரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.**

- மூன்று பரப்பாக பிரிக்கப் பட்ட நிலையில்.
- K.K.S வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- பார்வையிடும் நேரம்

காலை 09.00- மாலை 06.00 மணி வரை

தொடர்பு- 0776234204



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தில் 33 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- ஓட்டுமடம் சந்தியிலிருந்து அராலி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன் (காரைநகர் செல்லும் பிரதான காபெட் வீதி)
- யாழ்: மாநகரசபை எல்லைக்குட்பட்டது.
- 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ். பஸ்நிலையத்திலிருந்து 1 1/2 KM தூரம்
- பார்வையிடும் நேரம்: காலை 06.00 - மாலை 6.00

077 911 6983 /076 755 8606



## காணி விற்பனைக்கு

சங்கானை நகரத்தில் இருந்து 500M தூரத்தில் அமைந்துள்ள 3 பரப்புக் காணியும், வீடும் விற்பனைக்கு உண்டு.
(தரகர் தேவையில்லை)

தொடர்பு:0773 744 652



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி சந்திக்கு அருகாமையில் 04 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- ✓ 4 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- ✓ தரகர் தேவையில்லை.
- ✓ A-09 வீதி முகப்புடன் காணி உள்ளது.

தொடர்பு: 077 8748 135
077 4082 649




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.